ந.க.எண் 2421/2022/இ1

நகராட்சி அலுவலகம், புதுக்கோட்டை
நாள். 28.04.2022

# ஒப்பந்தப்புள்ளி அழைப்பு

## பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2021–2022

இராஜ்யசபை உறுப்பினர் அவர்களால் பரிந்துரைக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2021–2022ஆம் ஆண்டு நிதியின் கீழ் கீழ்க்கண்ட பணிகளுக்கு மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 13.05.2022 அன்று மாலை 3.00 மணி வரை நகராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர்களிடமிருந்து வரவேற்கப்படுகிறது அவ்வாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் 13.05.2022 அன்று மாலை 3.30 மணிக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தக்காரர்கள் முன்னிலையில் ஆணையர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவர்களால் திறக்கப்படும். ஒப்பந்தப்புள்ளி படிவங்களை 12.05.2022 அன்று மாலை 4.00 மணி வரை உரிய தொகையினை செலுத்தி நகராட்சி தகவல் மையத்தில் பெற்றுக்கொள்ளலாம். அல்லது நகராட்சி இணையதளத்தில் http://municipality.tn.gov.in/tenders இலவசமாக பதிவிறக்கம் செய்துக்கொள்ளலாம். இதர விவரங்களை நகராட்சி பொறியாளர் பிரிவில் அலுவலக நேரத்தில் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

| வ. எ ண் | பணிகளின் விவரம் | மதிப்பீடு ரூபாய் லட்சத்தில் | முன் வைப்பு தொகை ரூ | ஒப்பந்தப் புள்ளி படிவக் கட்டணம் ரூ | பணி நாட்கள் | வகுப்பு |
|---|---|---|---|---|---|---|
| 1 | நகராட்சிக்குட்பட்ட DO திட்ட சாலையில் இருபுறமும் சிமெண்ட் கற்கல் நடைபாதை மற்றும் சாலையோர பூங்கா, வடிகால் வசதி , மின்விளக்கு வசதி மற்றும் பொதுமக்கள் நடைபாதை மற்றும் உடற்பயிற்சி, பொழுது போக்கு சமூக பூங்கா அமைக்கும் பணி மேற்கொள்ளுதல். | 25,00,000 | 25000/– | 7080/– | 120 நாட்கள் | நான்காம் வகுப்பு |
| 2 | நகராட்சி பேருந்து நிலையம் அருகில் உள்ள இருசக்கர வாகனம் நிறுத்துமிடம் மேல்புரம் செல்லும் திறந்த வெளி மழைநீர் வடிகால் வாரியை சுத்தம் செய்தல் இருபுறமும் கான்கிரீட் கவர் பில்லர், கான்கிரீட் (Deck slab) மூடு ஸ்லாப், கழிவு துகள்கள் சுத்தம் செய்யும் வடிகட்டி தொட்டி (Screening / grit and silt Chamber) ஆழ்நுழைவு சுத்தம் செய்யும் தொட்டி, வாய்கால் புனரமைப்பு பணி செய்தல். | 25,00,000 | 25000/– | 7080/– | 120 நாட்கள் | நான்காம் வகுப்பு |

### நிபந்தனைகள்

1. ஒப்பந்தப்புள்ளியுடன் 1% முன்வைப்புத் தொகை ஆணையர், புதுக்கோட்டை நகராட்சி என்ற பெயரில் வங்கி வரைவோலையாகவோ அல்லது 28.04.2022 தேதிக்குப்பின் தேதிய (NSC) சேமிப்பு பத்திரங்களை பெற்று ஆணையர் பெயருக்கு அடமானம் செய்யப்பட்டதாக மாற்றி இணைக்கப்பட வேண்டும்.
2. கூடுதல் வைப்புத்தொகையாக 1% பட்டியலில் பிடித்தம் செய்யப்படும்.
3. ஒப்பந்தப்புள்ளியை ஏற்கவோ நிராகரிக்கவோ நகர்மன்றத்திற்கு முழு அதிகாரம் உண்டு
4. இப்பணிக்கு பணி உத்தரவாத தொகையாக (Security depotist) 5% பட்டியலில் பிடித்தம் செய்யப்படும். பிடித்தம் செய்யப்படும் தொகை ஓராண்டுக்கு பின்பு பணியில் குறைபாடுகள் இல்லாத பட்சத்தில் திரும்ப வழங்கப்படும்.
5. பொதுப்பணித் துறை அல்லது அரசு சார்ந்த துறையில் நடப்பாண்டிற்கு ஒப்பந்ததாரராக பதிவு செய்திருக்க வேண்டும், நகல் இணைக்கப்பட வேண்டும்.
6. பணிகளை துவங்குவதற்கு முன்பும், ஒவ்வொரு நிலையிலும், பணி முடிவுற்ற பின்பும் நிழற்படம் எடுக்க வேண்டும்.

ஆணையாளர்,
புதுக்கோட்டை நகராட்சி.

இடம் : புதுக்கோட்டை
நாள் : 28.04.2022

பெறுதல்:-
இந்நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர்கள்.

நகல்:- இளநிலைப் பொறியாளர், பொதுப்பணி மேற்பார்வையாளர், வரைவாளர் , தக்க நடவடிக்கைக்கு.

Scanned with CamScanner